**திவுலப்பிட்டி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.9 | நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்வதற்கு இலகுவான முறையில் உள்ளபடியான, பாதீடு செய்யப்பட்ட மற்றும் முன்னைய சமமான காலப்பகுதியின் உள்ளபடியான மற்றும் பெறுமதிகளுக்கிடையே ஏதாவது போதியளவான மாற்றங்கள் மற்றும் அவற்றிற்குரிய காரணங்கள் | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது உரிய மாதிரியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்திற்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 1,019,963,624 இற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 29,511,830 வீதம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது தகவல்கள் உள்ளடக்கப்படும். | நியமத்திற்கு இணங்க கணக்குகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | வருமான முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 1,070,000 ஆன இரண்டு மென்பொருள் முறைமைகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சகல சொத்துக்களும் மூலதனமாக்கப் படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 193,585,887 தொகையான மூலதன மானியங்களில் ஆண்டிற்குரிய பெறுமதியான ரூபா 19,650,487 தொகை நடைமுறையல்லா செலவினங்களுக்காக அரசாங்கத்தினால் பெறுகின்ற கையளித்தல் கணக்கிற்கு மாற்றப்படாமையின் காரணமாக விரிவான வருமானக்கூற்றில் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன மானியங்களில் வருடாந்தம் இனங்காணப்படுகின்ற அளவு 2021 ஆம் ஆண்டு முதல் விரிவான வருமானக் கூற்றில் பதியப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய இடர்கடன் மீதியில் முன்னைய ஆண்டுகளில் ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 131,572 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றில் ஊழியர் கடன் மீதி ரூபா 131,572 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 131,572 தொகை வைப்பு பதிவேட்டில் கொண்டுவரப்பட்டு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடனை சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பன்முகப்படுத்தப்பட்ட கைத்தொழில்களை அமுல்படுத்துவதற்காக பிரதேச செயலகத்திலிருந்து நிர்வாக செலவினமாக 2016 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 514,000 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் நானாவித வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பன்முகப்படுத்தப்பட்ட கைத்தொழில்களை அமுல்படுத்துவதற்காக சபையினால் செலவிடப்பட்ட நிர்வாக செலவினங்களுக்காக திவுலப்பிட்டி பிரதேச செயலகத்திலிருந்து கிடைத்த ரூபா 67,368 தொகை வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இது கடன்பட்டோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு மீள செலுத்தப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கருங்கல், கிரவல், சிறுகற்கள் என்பவற்றை போக்குவரத்துச் செய்வதற்காக பிரதேச சபை வீதிகளை பயன்படுத்தியதற்காக 35 சந்தர்ப்பங்களின் போது வேலைத்தளங்களின் உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 305,000 வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலைக் கடன்பட்டோர் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 105,871,063 மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 136,958,722 ஆனமையால் ரூபா 31,087,659 வேறுபாடொன்று காணப்பட்டதுடன் கடன்பட்டோர் மீதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த 1-3 வருடங்களுக்கிடையில் ரூபா 8,724,548 மற்றும் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 97,146,478 தொகைகள் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாடுகள் பல வருட காலம் முதல் கொண்டு வரப்படும் ஒன்றாகும். தற்போதுள்ள பதிவேடுகள் மற்றும் காசேடுகளை பரீட்சித்த போது இறுதிக் கணக்கிற்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதாகும். மேலும் இது தொடர்பாக பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். பட்டோலைகளின் பிரகாரம் கடன்பட்டோர் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை கண்டறிந்து நிதிக்கூற்றுக்களை சரியான தரவுகளின் பிரகாரம் தயாரிப்பதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 54,023,294 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஏனைய வருமானங்களில் பதிவேடுகளுக்கு கொண்டுவராத மீதி 2019 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 36,313,796 ஆக இருந்ததுடன் அது 2020 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 31,088,000 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 5,225,796 தொகைக்கு ஆவணங்கள் சமர்ப்பித்து சரிசெய்யப்பட்டுள்ளது. இனங்காணப்படாத பொதுக் களஞ்சிய இருப்பு 2010 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ஒரு வழுவாகும். பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 72,591,000 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,962,179 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,582,658 தொகையான ஆதனவரி நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனவரியை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 58 கடைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத மாதாந்த வாடகை ரூபா 3,500 தொகையான 05 கடைகளில் 03 கடைகளுக்காக ரூபா 150,000 வைப்பு பணம் 2020 யூலை 28 ஆந் திகதி பெறப்பட்டிருந்த போதிலும் வியாபார நடவடிக்கைகளுக்காக தகுதியான நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 713,505 தொகையில் 01 வருடத்திற்கு மேல் ரூபா 97,020 ஆக இருந்ததுடன் அது அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு வாடகையை வழங்குமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்து புதிய மதிப்பீட்டு வாடகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 05 கடைகளுக்கு பல தடவைகள் கேள்வி கோரப்பட்ட போதிலும் அந்த கடைகள் வாடகைக்கு பெறப்பட்டிருக்கவில்லை. 2020.07.14 இல் சபைக்கு இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட சிட்டை ரூபா 50,000 வீதம் வைப்பு பணத்தை அறவிட்டு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திவுலப்பிட்டி வாராந்த சந்தை வளவில் மேல் மாடியில் இலக்கம் 17, 18, 20 இற்காக 2020.07.28 ஆந் திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் 76526 மூலம் ரூபா 150,000 அறவிடப்பட்டுள்ளது. நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | புதிய மதிப்பீட்டை பெற்று அதன் பிரகாரம் வாடகையை அறவிடுவதற்கும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை நிதியம் ரூபா 1,846,590 பயன்படுத்தப்பட்டு 2019 திசெம்பர் 18 ஆந் திகதி வரையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வல்பிட்ட துறு செவன வளவில் இயற்கை உணகம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வருமானத்தை உழைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | வல்பிட்ட துறு செவன வளவில் இயற்கை உணவகத்தை வாடகைக்கு வழங்குவதற்காக அரசாங்கத்தின் மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 15,250 ஆக பிரதான மதிப்பீட்டாளரின் 2020.11.16 ஆந் திகதிய கடிதமொன்று கிடைத்திருந்ததுடன் அதன் பிரகாரம் கேள்வி மூலம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபை ஆதனங்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (நர்ட்) ஆலோசணையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 செலவில் உயிரியல் வாயு உற்பத்தியாக்கியை சபை சுற்றாடலில் அமைத்து அதனை அமுல்படுத்துவதற்காக சபையின் ஊழியர் ஒருவருக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும் உயிரியல் வாயு அலகிற்கு தேவையான குழாய்களை பதிப்பதற்காக பொருத்தமான இடமொன்று சபையினால் வழங்கப்படாமையினால் நர்ட் நிறுவனத்தால் அந்த செயற்திட்டம் நிரலில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. அந்த அலகை மீண்டும் மீளமைப்பதற்கு முன்னர் வழுக்களை பரீட்சித்து பார்க்க வேண்டியிருந்தமை 2020 மார்ச் 04 ஆந் திகதிய நர்ட் நிறுவனத்தின் N/NED/COM/02/09/2014/2020-01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவித்திருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் Covid தொற்றுநோயினால் ஊடரங்குச் சட்டம் விதிக்கப்பட்டமையினால் உயிரியல் வாயு அலகை அமுல்படுத்தும் நிலைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. | உரிய கட்டமைப்பு வசதிகளை வழங்கி செயற்திட்டத்தை தாமதமின்றி அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |